தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1979 ஏப்ரல் 27

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. ஒழுங்குப் பிரச்னை.

உறுப்பினர்களுக்குச் சட்டெழுத்தாளர் உதவி கிடைக்காதது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், ஒரு தர்மத்தை உங்களிடம் கேட்கிறேன். ஏதாவது ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்க வேண்டுமென்றால் கொடுக்கக் கூடாது என்பதற்காகவோ என்னவோ டைப்பிஸ்ட்களே இல்லாமல் செய்திருக்கிறார்களே, இது தர்மம்தானா, நியாயம்தானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றி விசாரிக்கப்படும். அதே நேரத்தில், நாளைக்கு முடித்துக் கொண்டு நிம்மதியாகச் செல்கிறோம், இனி எதுவும் இருக்காது என்ற எண்ணத்திலே இருந்தாலும் இருக்கலாம். இருந்தாலும்கூட அது தவறுதான், விசாரிக்கிறேன்.

2. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தஞ்சை சரபோஜி கட்டிடம்.

*வினா எண் 844— திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை பழைய சரபோஜி மன்னர் இருந்த கட்டிடம் இடிந்து விழுந்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீர்படுத்தும் உத்தேசம் உண்டா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) :

(அ) ஆம்.